


சிரியாவில் அமைதி பேச்சில் ஈடுபட்ட, ஐநாவுக்கான சிறப்பு துாதர் ராஜா ஆறுமுகத்துக்கு 2017ம் ஆண்டுக்கான லயோலா விருதை கல்லுாரி தலைவர் ஜெயபதி வழங்கினார். உடன் கல்லுாரி செயலர் செல்வநாயகம், முதல்வர் ஆண்ட்ரூஸ், செயலர் சூசை செபாஸ்டின் ஆகியோர். இடம்: லயோலா கல்லுாரி, சென்னை.

Dinamalar, Vellore - July 02, 2018

# ஐநா தமிழருக்கு லயோலா விருது

சென்னை, ஜூலை 2–

ஐநா சபையில், அமைதி பேச்சுவார்த்தைக் கான சிறப்பு பிரதிநிதிகள் அலுவலகத் தலைமை அதிகாரியானதமிழர் ராஜா ஆறு முகத்துக்கு, 'லயோலா விருது 2017'வழங் கப்பட்டது.

சென்னை லயோலா கல்லூரியில், லயோலா சபைப் சார்பாக 'லயோலா விருது' ஆண்டுதோ றும் வழங்கப்படுகிறது. இந்த விருதை ராஜா ஆறுமுகத்துக்கு கல்லூரி தலைவர் ஜெயபதி பிரான்சிஸ் வழங்கி பேசியதாவது:

போரிடும் நாடுகளுக்கு இடையே மிகவும் சிக்கலான நேரத்தில் அமைதியை, இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் உயர் பொறு ப்பை ராஜா ஆறுமுகம் சிறப்பாக செய்தார்.

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்து, லயோலாவில் 1980ல் ஆங்கில இலக்கிய பட்டம் பெற்றவர், ஐநாவில் பல்வேறு பொறுப்புகளை மேற் கொண்டார். விருது பெற்றுக்கொண்ட ராஜா ஆறுமுகம், " கார்த்திகேயன் ஐபிஎஸ் (ராஜீவ் கொலைவழக்கை விசாரித்தவர்) போல ஆக வேண்டும் என்பதுதான் என் விருப்பம். லயோ லாவில்தான் முயற்சி மற்றும் மனிதநேயதை புரிந்துகொண்டேன். இவ்வாறு அவர் பேசி னார். நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் செல்வ நாயகம், முதல்வர் ஆண்ட்ரூஸ், இயக்குநர் தாமஸ் ஆகியோர் பங்கேற்றனர்.